# தென்தேசத்து ராஜஸ்திரீ



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-03-06 **சாலொமோனிலும் பெரியவர் இப்பொழுது இங்கே இருக்கிறார்**, பாரா 23 முதல் பாரா 62 வரை

23 அவர் யோனாவைக் குறித்து பேசி முடித்த பின்பு சாலொமோனின் காலத் துக்கு வருவதை நாம் காண்கிறோம். சாலொமோனின் காலம் பழைய ஏற்பாட் டின் காலத்தின் ஆயிரம் வருட அரசாட்சி என்று நாமெல்லாரும் அறிவோம். இஸ்ர வேலரின் காலம்மிக்க மகத்துவமானது; யுத்தங்கள் எதுவும் இருக்கவில்லை. அவர் களுக்கு மகத்தான தருணம் உண்டா யிருந்தது, தேவன் தாவீதின் குமாரனாகிய சாலொமோனுக்கு சிந்தனைகளைப் பகுத் தறியும் வரத்தை அருளியிருந்தார். அவ

னால் ஜனங்களின் இருதயங்களிலுள்ள சிந்தனைகளைப் பகுத்தறிய முடிந்தது. அங்கு நின்றுகொண்டிருந்த எபிரெயன் அதை அறிந்து கொண்டிருக்கவேண்டும்!

சாலொமோனுக்கு சிந்தனைகளைப் பகுத்தறியும் வரம் இருந்தது. அவனால் அவர்களுடைய இருதயங்களிலுள்ள சிந்த னைகளை அறிய முடிந்தது. அவர்கள் எல்லோரும் சாலோமோனை ஆதரித்தனர். ஆனால் இங்கோ சாலொமோனிலும் பெரி யவர் நின்று கொண்டிருந்தார். சாலொ மோன் தாவீதின் குமாரன். இருப்பினும் அவன் மாம்சத்தில் தோன்றிய சிறிய தாவீதின் குமாரன். ஆனால் இயேசுவோ, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜரீக சந்ததியாகிய தாவீதின் குமாரன். இங்கோ சாலொமோனிலும் பெரியவர் நின்று கொண்டு, சாலோமோன் செய்த அதே

செயலைப்புரிந்தார். ஆனால் ஒரே வித்தி யாசம் என்னவெனில், அவர் சாலொமோ னிலும் பெரியவர். ஆனால் அவர்களோ அவரை ''பெயல்செபூல்' என்றழைத்தனர். வேதவாக்கியத்திற்கு எவ்வாறு அர்த்தம் உரைக்கப்படுகிறதென்பதை கவனித்தீர் களா? ''பொல்லாதவிபச்சாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுவார்கள்; அவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள், அது உயிர்த்தெழுதலின் அடையாளம்' என்று அவர் கூறினதில் வியப்பொன்றுமில்லை.

24 சாலொமோனின் காலத்தில் பெரிய எழுப்புதல் உண்டாயிருந்தது. நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, இதை ஒருவிதமான கதை வடிவில் கூறப் போகின்றேன். சாலொமோனின் நாட்களில் ஒரு பெரிய எழுப்புதல் நடந்து கொண் டிருந்தது. தேவன் ஒரு வரத்தை அருளி

யிருந்தார், தேசம் முழுவதுமே அதை ஆதரித்தது. எல்லோரும் அதனிடம் வந்தனர். அவர்கள் முழு இருதயத்தோடும் அதை விசுவாசித்தனர். இன்றிரவு ஜனங்களிடையே அப்படி நடந்து, அமெரிக்கா முழுவதுமே, கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர் அனைவருமே, இக்கடைசி நாட்களில் காணப்படும் தேவனுடைய வரத்துக்கு - ஜனங்களின் மேல் ஊற்றப்பட்டுள்ள பரிசுத்த ஆவிக்கு - ஆதரவு தெரிவிப்பார்களானால், அது மிகவும் அற்புதமாயிருக்கும் அல்லவா? இக்கடைசி நாட்களின் தேவனுடைய வரம் பரிசுத்த ஆவியே. கிறிஸ்து ஆவியின் வடிவில் இப்பொழுது நம்முடன் இங்கே இருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் எல்லா சபை

களுமே தேவன் நமக்கு அருளியுள்ள இந்த மகத்தான வரத்துக்கு ஆதரவு தெரிவிக்கு மானால், அது மிகவும் அற்புதமாயிருக்கும் அல்லவா? அவர்கள் ஏன் அதை ஆதரிப் பதில்லை? அவர்கள் அகன்று பலவிதமான தத்துவங்களிலும், கோட்பாடுகளிலும் கொள்கை களிலும் சிக்கிக்கொண்டுள் ளனர். எது எதுவென்று உங்களால் சொல்ல முடியாது. அவர்கள் எப்பொழுதும் அவ் வாறே செய்து வந்துள்ளனர். ஆனால் தேவனோ முடிவுகாலத்தில் வித்துக்கு இதை தெளிவுபடுத்திக் கொடுப்பதாக வாக் களித்துள்ளார்.

25 இதை கவனியுங்கள், இந்த மகத் தான வரத்தை அவர்கள் அனைவருமே ஆதரித்ததாக நாம் காண்கிறோம். இஸ்ர வேல் தேசமும் இதற்கு முன்பில்லாத அளவுக்கு வளர்ச்சியடைந்தது. எல்லா

தேசங்களும் இஸ்ரவேலுக்கு பயந்தன. தேவன் இஸ்ரவேலருடன் இருக்கிறார் என்று அவர்கள் அறிந்திருந்ததால், அங்கு வருவதற்கும் கூட அவர்கள் பயந்தனர். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் கம்யூனிஸத்தை ஒழிக்கவேண்டுமென்று பேசுகிறீர்கள், அமெரிக்கா தேவனிடம் திரும்பட்டும் - அவளுடைய வரத்தி னிடமும், பரிசுத்த ஆவியிடமும் திரும் பட்டும். அப்பொழுது ஜனங்கள் கம்யூ னிஸத்தைக் குறித்து கூச்சலிடுவதை நிறுத் திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விடும். அது மிகவும் பூச்சரிக்கப்பட்டு, கம்யூனிஸ்டுகள் தாங்கள் யாரென்று அறிந்து கொள்வதற்கு கம்யூனிஸத்துக்கு விரோதமான அமைப்புகளை ஏற்படுத்த வேண்டியதாயுள்ளது. அது அப்படித்தான்

இருக்கவேண்டும். அவர்கள் திரும்பி வரட்டும்.

26 அண்மையில் பின்லாந்தில் அது நிகழந்தபோது, சகோ.லிண்ட்சே என்னுடன் இருந்தார் என்று நினைக்கிறேன். அவர் சென்ற இரவு இங்கிருந்தார். நான் இங்கு தரிசனத்தில் கண்ட ஒரு சிறுவன்; அங்கு மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப் பட்டான். நான் இந்நாட்டை விட்டு அங்கு செல்லும் போது, அவன் காண்பதற்கு எப்படியிருப்பான், அவன் எங்கிருப்பான் போன்ற விவரங்களை நான் கூறினதை உங்களில் அநேகர் வேதாகமத்தில் இன்னும் எழுதி வைத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப்பட்டான், அவன் வாகன விபத்தில் கொல்லப்பட்டான். அது

உங்களில் அநேகருக்கு ஞாபகமிருக்கும். அவன் மரித்தோரிலிருந்து உயிரோடெழுப் பப்பட்ட போது, நான் அங்கு நின்று கொண்டிருந்தேன்.

அன்றிரவு நாங்கள் மெஸ்ஸ ஹாலிக்கு சென்று கொண்டிருந்தோம். சகோ.லிண்ட்சே, சகோ. மூர், இன்னும் அநேகரும் மெஸ்ஸ் ஹாலியை அடைய முயன்று கொண் டிருந்தோம். அங்கு ஆயிரக்கணக்கானவர்களுடன் நான் பேசும் படி அனுமதித்தனர், பிறகு அவர்களை அனுப்பிவிட்டு இன்னும் அநேகரிடம் பேசும்படி செய்தனர். வழியில் நான்கைந்து 'பிளாக்'குகள் எல்லாமே அடைபட்டு விட்டன. ஜனங்கள் நாங்கள் வருவதைக் காணதெருக்களில் நின்று கொண்டிருந் தனர், அங்குகக்கதண்டம் (crutches) வைத் துக்கொண்டு ஒரு சிறுமி இருந்தாள்,

அவளுடைய ஒரு கால் மற்றகாலைக் காட்டிலும் குட்டையாக இருந்தது. அவள் சுகமடைந்தாள். அநேக அற்புதங்கள் அங்கு செய்யப்பட்டன.

27 இந்த சிறுவன் உயிரோடெழுந்த செய்தி ஒலிபரப்பானது.

பின்லாந்தில் 'ராக் அண்டு ரோல்' இசை கிடையாது, அப்பொழுது அவர்களிடம் அது இல்லை, அவர்களுடைய வானொலி யில் செய்திகளும் முக்கியமான காரியங் களும் ஒலிபரப்பு செய்யப்பட்டன. அது ருஷியா வரைக்கும் சென்றது. நீங்கள் ருஷியாவில் வாழ்ந்து நீங்கள் பிறந்த இடம் உங்கள் வீட்டிலிருந்து நாற்பது மைல் இருந்தால், உங்கள் வேலை என்னவென்று காண்பிக்க உங்களுக்கு அனுமதிச்சீட்டு (Visa) அவசியம். இரும்புத்திரை அங்கு

மெஷின் துப்பாக்கிகள் கியோப்பியாவில் (Kuopio) தெருக்களில் காணப்பட்டன.

அன்றிரவு இந்த செய்தி அங்கு எட்டியதால், தெருக்கள் பல்லாயிரக்கணக்கான ருஷியர்களால் நிறைந்திருந்தன.

28 அந்த கம்யூனிஸ்டு இராணுவ வீரர்கள் - ருஷிய இராணுவ வீரர்கள்- சிறு வட்டத் தொப்பிகளை அணிந்து நின்று கொண்டிருந்தனர்; அந்த ஆறு சிறு பின் லாந்து பையன்கள், அந்த சண்டைக்குப் பிறகு, அவர்கள் முகச்சவரம் செய்வதற்கும் கூட போதிய வயதாகவில்லை, வழவழப் பான முகம் கொண்டவர்கள். பெரிய காலணிகளையும், நீண்ட 'கோட்'டுகளையும் அணிந்து, பட்டாக்கத்தியுடன் நான் ஜனக்கூட்டத்தின் வழியாக செல்வதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். ருஷியர்கள்

அங்கு நின்று கொண்டிருந்தனர். நான் அங்கு சென்றபோது, அவர்கள் நேராக (attention) நின்று இராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்தினர். அவர்களுடைய கன்னங்களின் வழியாய் கண்ணீர் வடிந்தது. நான் கடந்து சென்றபோது, அவர்கள் பின்லாந்து இராணுவ வீரர்களை பிடித்து இழுத்து, அவர்களுடைய முதுகில் தட்டி, அவர்களைக் கட்டித்தழுவினர், ருஷியாக் காரன் பின்லாந்துகாரனை முதுகில் தட்டச் செய்யும் எதுவும் அவர்களிடையேயுள்ள யுத்தத்தை நிறுத்தும். அவர்கள், ''மரித் தோரை உயிரோடெழுப்பின அப்படிப் பட்ட தேவனை நாங்கள் ஏற்றுக்கொள் வோம்'' என்றனர்.

நண்பனே, அதுதான் இன்றுள்ள காரி யம். அவர்களை கம்யூனிஸ்டுகளாக மாற்றி யது, குருமார்கள் தேவனுடைய வார்த்

தையை விட்டகன்றதே. அவர்கள் அவர்களுடைய பணத்தை அபகரித்துக் கொண்டு, அதற்கு பதிலாக அவர்களுக்கு ஒன்றுமே கொடுக்காமல், அவர்கள் ஒரு விடுதியில் உள்ளவர்களைப் போல் நடத்தினர். அதுதான் உலகில் உள்ள தவறு.

29 சாலொமோனின் நாட்களில், சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து பெற்றிருந்த அந்த மகத்தான வரத்தை அவர்கள் அனைவரும் ஆதரித்தனர் என்று நாம் காண்கிறோம். ஜனங்கள் வருவதும் போவதுமாயிருந்தனர். எல்லா தேசங்களும் இஸ்ரவேலைக் கண்டு நடுங்கின. இஸ்ரவேலுக்கு விரோதமாக போர் செய்வதற்கு பதிலாக, அவர்கள் சமாதான காணிக்கையை கொண்டுவந்தனர். அவர்கள் அங்கிருந்த மனிதனைக்குறித்து அவ்வளவு பயப்படவில்லை. அவர்கள்

ஒற்றுமையாய் வழிபட்ட அந்த தேவனுக்கு பயந்து நடுங்கினர்.

இன்றிரவு இந்த தேசமும் தேவனுக்குப் பயந்து, நாமெல்லாரும் அவருக்கு மரி யாதை கொடுத்து, அவரளிக்கும் பரிசுத்த ஆவியின் வரத்தை நாம் ஏற்றுக்கொண்டு அதை ஆதரித்து, ஒவ்வொரு சபையும் தங்கள் கோட்பாடுகளை முறித்துப்போட்டு கதவுக்கு வெளியே எறிந்து, பலிபீடத் தினருகே வந்து, இக்கடைசி நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்து தமது வார்த் தையை அடையாளம் கண்டுகொள்ளும் வரைக்கும் அங்கு காத்திருந்தால் எவ் வளவு நலமாயிருக்கும்!

30 சிலர், “யூதர்கள் பெறுவதற்காகவே அது அருளப்பட்டது. அவ்வளவுதான்'' என்று கூற முயல்கின்றனர்.

பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, ''நீங்கள் மனந் திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனா கிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது'' என் றான்.

அழைக்கப்படுவதற்கென பூமியில் ஒரு வித்து காத்திருக்கும்வரைக்கும், அதை தம்மிடம் அழைத்துக்கொள்ள பரிசுத்த ஆவி ஒன்று உள்ளது. அது உண்மை. அது இன்னமும் அவ்வாறே உள்ளது. ஆனால் அதுவரும்போது, அது புறக்கணிக்கப்படு கிறதென்று நாம் காண்கிறோம். அதன்

காரணமாகத்தான் தேசம் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுகிறது. அதன் காரணமாகத் தான் காரியங்கள் இன்றிரவு இத்தகைய வழிகளில் சென்று கொண்டிருக்கின்றன.

31 சாலொமோனின் காலத்தில், அது அவ்வாறிருக்கவில்லையென்று நாம் காண்கிறோம். அவர்கள் எல்லோருமே சாலொமோன் பெற்றிருந்த சிந்தனை களைப் பகுத்தறியும் வரத்தை ஆதரித்தனர். மற்ற தேசங்கள் தேவனுக்குப் பயந்து நடுங்கின. எல்லா விடங்களிலும் செய்தி பரவினது. "ஓ, நீங்கள் இஸ்ரவேலுக்குச் சென்று காணவேண்டும். அவர்களுடைய தேவன் ஒரு வரத்தை அவர்கள் மத்தியில் எழுப்பியுள்ளார். அவர்கள் அந்த வரம் பெற்றவரை ராஜாவாக நியமித்துள்ளனர். அவர் பெற்றுள்ள ஞானம், சிந்தனை களைப் பகுத்தறிதல், மனித ஞானத்துக்கு

அப்பாற்பட்டது. அது தேவர்களின் ஆதிக்கத்தைச் சேர்ந்தது. அவ்வாறு அஞ்ஞானிகள் கூறினர். அது எப்படியென்று எங்களுக்குப் புரியவில்லை, ஆனால் அவர்களுடைய தேவன் தமது விசுவாசிகளில் ஒருவருக்குள் பிரதிநிதித்துவம் கொண்டுள்ளார். அவர்கள் அவரை சிங்காசனத்தில் உட்காரவைத்து, அவர்கள் அனைவரும் அவருக்குச் செவி கொடுக்கின்றனர்.

இந்த செய்தி தொலைகாட்சி அல்லது தொலைபேசி மூலம் பரவவில்லை. அது ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவினது.

32 முடிவில் இந்தசெய்தி சகாரா பாலைவனத்தைக் கடந்து, சேபா (Sheba) என்னும் சிறு நாட்டை அடைந்தது. அது ஒரு அஞ்ஞான நாடு. அவர்களுக்கு ஒரு சிறு ராஜஸ்திரீஇருந்தாள். அவள் நல்ல

பெண்மணி என்பதில் ஐயமில்லை. தேவன் இஸ்ரவேல் தேசத்தில் பெரிய எழுப்புதலை அருளியிருக்கிறார், அங்கே பெரிய காரி யங்கள் நடக்கின்றன, அவர்களுடைய தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரை அவர்கள் பெற் றுள்ளனர். அவருடைய ஞானம் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகத் திகழ் கின்றது என்னும் செய்தி அவளை யடைந்தது.

உங்களுக்குத் தெரியும். 'விசுவாசம் கேள்வியினால் வரும், தேவனுடைய வார்த்தையைக் கேட்பதனால் வரும்'' அது அவள் சிறு இருதயத்தை அசைத்தது. அவள் அதைக் குறித்து யோசிக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு வியாபாரி களின் கூட்டம் வரும் போதும், இந்த ராஜஸ்திரீதன் சேவகர்களை அனுப்பி,

அவர்கள் இஸ்ரவேல் தேசத்துக்குசென்று வந்திருந்தால், அவர்களுடன் தனியாக பேச விரும்புகிறேன்''என்று கூறியிருப் பாள் என்பதில் ஐயமில்லை.

“ஆம், ராஜஸ்திரீயே. நாங்கள் இஸ்ர வேல் தேசத்துக்கு சென்றிருந்தோம். ஓ, அது மிகவும் அற்புதமாயுள்ளது. நீங்கள் அதைக் காணவேண்டும். அதைப் போன்ற ஒன்று இல்லவே இல்லை. அது மனித னுடைய அறிவுக்கு அப்பாற்பட்டது. உங்க ளுக்குத் தெரியுமா, அவர்கள் எல்லோரும் ஒருமனப்பட்டவர்களாய், அவர்களுடைய தேவன் அவர்களுக்களித்துள்ள வரத்தை சுற்றியிருந்து ஒருமனதுடன் அதை விசு வாசிக்கின்றனர். ஓ, அது மிகவும் கம்பீர மான ஒருசெயல், ஒன்றுமே அவர்களுக்கு மறைபொருளாயில்லை. தேவன் எல்லா வற்றையும் வெளிப்படுத்தித் தருகிறார்.

எந்த தேசமாகிலும் அவர்களுக்கு விரோத மாக எழும்பி வந்தால், அவர்களுடைய தேவன் அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்பதை வெளிப்படுத்திவிடுகிறார். எனவே எதிரிகள் அங்கு அடைவதற்கு முன்பே, அவர்கள் பதுங்கி அவர்களைத் தாக்கி விடுகின்றனர், ஓ, ஒரு மகத்தான எழுப்புதல் அங்கு நடந்து கொண்டிருக் கிறது.''

33 அப்பொழுது அந்த ராஜஸ்திரீ, அவளே அதைக் காணவேண்டுமென்று தன் இருதயத்தில் பசிகொண்டாள்.

உங்களுக்குத் தெரியுமா, அதில் ஏதோ ஒன்றுள்ளது. மனிதன், தான் ஏதோ ஓரிடத்திலிருந்து வந்து இங்கிருக்கிறான் என்று அறிந்திருக்கிறான். ஆனால் அவன் எதற்காக இங்கிருக்கிறான் என்று அறிகிற

தில்லை. அவன் வேறெங்கோ செல்கிறான், அவன் எங்கு செல்கிறான் என்பதையும் அறியாமலிருக்கிறான். நீங்கள் யாரென் றும், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றும், நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்றும் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கு உலகில் ஒரே ஒரு புத்தகம் மாத்திரமே யுண்டு. அதுதான் வேதாகமம். அது ஒன்று மாத்திரமே உங்களுக்கு அறிவிக்கிறது. அது தேவனுடைய புத்தகம். அது தேவனே, வித்து என்றழைக்கப்படும் வார்த்தை வடிவில் தம்மை வெளிப்படுத்த லாகும். அந்த வித்து சரியான நிலத்தில் விதைக்கப் படும்போது, அவர் செய்துள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் தோன் றச் செய்யும். ஏனெனில் அது தேவனே. ஆனால் அது மற்றெந்த விதையைப் போல்

தண்ணீர் பாய்ச்சப்படவேண்டும். இதற்கு விசுவாசம் என்னும் தண்ணீர் பாய்ச்சினால், அவை நிறைவேறும். அதற்குள் ஜீவன் இருக்கின்றது. அதை அறிந்திருந்தது!

இப்பொழுது கவனியுங்கள்...

34 இந்த விதமாக நடந்த போது, அந்த ராஜஸ்திரீ தேவனுக்காக பசிதாகம் கொண் டாள் என்று நாம் காண்கிறோம். ஓ, தேவ னுடைய வரங்கள் மாத்திரம், அவளுக்குச் செய்ததுபோல், ஜனங்களுடைய இருதயத் தில் அவருக்காக தாகத்தை உண்டாக்கு மானால்

இப்பொழுது நாம் காண்கிறோம். சிறு பிள்ளைகள் வரிசை முழுவதும் இங்கும், மற்றவிடங்களிலும் அமர்ந்துள்ளனர். அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்

என்பதற்காக இதை நாம் ஒருவிதமான நாடக வடிவில் அளிக்கலாம்.

35 அவள் ஒரு அஞ்ஞானி என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.அவள் அதை செய்ய வேண்டுமானால், அவள் ராஜஸ்திரீ என்பதனால், அவள் போவதற்கு தன் அஞ்ஞான பூசாரியின் அனுமதி பெற வேண்டும். அவள் அவனிடம் சென்று தன்பொருத்தனைகளைச் செய்து, இவ்வாறு கூறுவதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ''மகத்தான பரிசுத்த பிதாவாகிய இன்னார் இன்னாரே, இஸ்ர வேல் ஜனங்களிடையே எழுப்புதல் உண் டாகியுள்ளதை நாமறிவோம். அவர்க ளுடைய தேவன் தம்மை ஒருமனித உருவில், ஒரு மகத்தான வரத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அதன் விளை வாக அந்த மனிதன் இருதயத்திலுள்ள

இரகசியங்களை அறிகிறார். அவர் அந்த வார்த்தை என்றும், வார்த்தை இருதயத்தின் நினைவுகளை வகையறுக்கும் என்றும், அது ஒரு மனிதனில் கிரியை செய்கிற தென்றும் அவர்கள் என்னிடம் கூறுகின் றனர். மிகுந்த பரிசுத்தமுள்ள பிதாவே, நான் அங்கு விஜயம் செய்து, நானே அதைக் காண்பதற்கு உங்கள் அனுமதி பெறவிரும்புகிறேன்.''

அவளுக்கு இத்தகைய பதில் கிடைப் பதை என்னால் கற்பனை செய்யமுடிகிறது: ''நாம் அந்த எழுப்புதலுக்கு ஒத்துழைப்பு அளிப்பதில்லை.'' அல்லது அது 1964ம் ஆண்டின் கருத்தாகும். என்னவாயிருப் பினும், அவன் இவ்வாறு கூறுகின்றான்: ''அவர்கள் நமது ஸ்தாபனத்தை சேர்ந்த வர்கள் அல்ல. அவர்கள் நமது ஜனங் களைச் சார்ந்தவர்கள் அல்ல. அதற்கும்

நமக்கும் எவ்வித தொடர்புமில்லை. நீ போகக்கூடாது. அவர்கள் விபரீத நடத்தை கொண்ட ஒருபைத்திய கூட்டமேயன்றி வேறொன்றுமல்ல. இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தைக்கடந்து வந்தனர் என்பது போன்ற வதந்தியை அவர்கள் நம்புகின்றனர், அதில் ஒரு உண்மையு மில்லை. இதோ நம்முடைய மகத்தான தேவன் சுவரருகில் நிற்பதைக் காண்கிறாய் அல்லவா? அவர்கள் இன்னார் இன்னார். அவர்கள் அநேக முறை இன்னின்ன காரியங்களைச் செய்தனர்.

ராஜஸ்திரீ வெறுப்புள்ளவளாய் திரும்பிச் சென்றாள்.

36 ஆனால், உங்களுக்குத் தெரியுமா, அதில் ஒன்றுண்டு, தேவன் மனித இருதயத் தில் பசிதோன்றச் செய்வாரானால், அதன்

வழியில் எதுவுமே நிற்க முடியாது. ஒத்துழைப்பு இருந்தாலும், இல்லாமற் போனாலும், வேறெதுவாயிருந்தாலும், அவள் அதை கண்டுபிடித்தே தீர வேண்டும்!

நேற்றிரவு அந்த ஸ்திரீயைக் குறித்து நான் கூறினது போல - அவள் விடாப்பிடியாகவும் விடாமுயற்சியுடனும் இருந்தாள் என்று. பாருங்கள், ஏதோ ஒன்று உங்களைப்பற்றிக் கொள்கிறது. நீங்களும் ஏதோ ஒன்றைப் பற்றிக்கொள்கிறீர்கள். தேவனுடைய குமாரனாகிய யாக்கோபு ஓரிரவு ஏதோ ஒன்றைப்பற்றிக் கொண்டது போல்; அதுவும் அவனைப்பற்றிக் கொண்டது. அவன் நோக்கம் நிறைவேறும் வரைக்கும் - அதனால் அவன் ஆசீர்வதிக்கப்படும் வரைக்கும் - அவன் அதைப் போகவிடவில்லை. அதுதான் உண்மையான காரியம்.

மனிதன் ஒன்றைப் போலியாகச் செய்யும்போது, அது சரியாக கிரியை செய்வதில்லை; ஆனால் அந்த ஒன்றை நீங்கள் பற்றிக்கொண்டு, அந்த ஒன்றும் உங்களைப்பற்றிக் கொள்ளுமானால், அது நிகழும்.

37 இன்றிரவு நீங்கள் சுகம் பெறுவதற் காக இங்கு வந்து, பரிசுத்த ஆவி உங் களைப் பற்றிக்கொள்ள அனுமதித்து, நீங் களும் அதைப் பற்றிக் கொள்வீர்களானால், நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொள்வீர்கள். அதைப் பெறாமல் உங்களைத் தடை செய்ய ஒன்றுமேயிராது. இயேசுகிறிஸ்து இரட்சிக்கிறவர் என்று நீங்கள் விசுவாசித்து வரும்போது, இரட்சிப்பின் வல்லமை உங்களை பற்றிக்கொள்கிறது, நீங்களும் அதைப் பற்றிக்கொள்கிறீர்கள். அப்பொ

ழுது நீங்கள் நிச்சயம் இரட்சிக்கப்படு வீர்கள்.

நீங்கள் பரிசுத்தஆவியின் அபிஷே கத்தை விசுவாசித்தால், பரிசுத்த ஆவி உங்களைப் பற்றிக்கொண்டு உங்களை அபிஷேகிக்கிறார். நீங்களும் அவரைப் பற்றிக்கொள்கிறீர்கள். நீங்கள் உங்கள் இடத்தை விட்டு நகர வேண்டியதில்லை. நீங்கள் இருக்கும் இடத்திலேயே அவர் தமது சமுகத்தினால் உங்களை நிரப்புவார், "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்ட வர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியான வர் இறங்கினார்'' என்று அவர் அன்று செய்ததுபோல். ஏதோ ஒன்று பற்றிக் கொண்டது!

38 நேற்றிரவு நாம் பேசிக்கொண் டிருந்த சீரோபோனிக்கியா தேசத்து ஸ்திரீயை ஏதோ ஒன்று பற்றிக்கொண்டது. அவளுக்கு எவ்வளவு தடைகள் இருந்த போதிலும், அவள் சென்று கொண்டிருந் தாள். இன்றிரவு நாம் பேசிக் கொண் டிருக்கும் அஞ்ஞானியாகிய இந்த ராஜஸ் திரீயையும் ஏதோ ஒன்று பற்றிக் கொண் டது, அது போன்றே, அஞ்ஞானியா யிருந்து விக்கிரகத்தை வணங்கின சீரோ போனிக்கியா தேசத்தாளாகிய இந்த கிரேக்க ஸ்திரீயையும் ஏதோ ஒன்று பற்றிக் கொண்டது. அவர்களை ஏதோ ஒன்று பற்றிக்கொண்டது, அவர்களும் அந்த ஒன்றைப்பற்றிக் கொண்டனர்.

வழியில் எப்பொழுது மேகஷ்டங்கள் இருக்கும். தேவனுடைய உண்மையான அசைவு துவங்குவதை சாத்தான் காணும்

போது, அவன் தன்னாலான எல்லாவற்றையும் எறிகிறான். அவன் உங்களுக்கும் அப்படி செய்வான். அவன் உங்கள் வழியிலும் தன்னாலான எல்லாவற்றையும் - எல்லா இடையூறுகளையும் போடுவான்.

39 அந்த ஸ்திரீக்கு நிறைய இடையூறுகள் இருந்தன என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். ஆனால் அவளுடைய விசுவாசத்துக்கு எந்த விதமான இடையூறும் இருக்கவில்லை. விசுவாசத்துக்கு இடையூறு கிடையாது. யார் என்ன கூறினபோதிலும், எதுவுமே அதை நிறுத்த முடியாது.

நீங்கள் தேவனை சரியாகப் பற்றியிருந்து, தேவன் உங்களைச் சரியாக பற்றியிருப்பாரானால், நாற்பது மருத்துவர்கள் இங்கு நின்று கொண்டு நீங்கள்

மரித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று உங்கள ளிடம் கூறினாலும், அதில் ஒரு வார்த் தையும் கூட நீங்கள் விசுவாசிக்க மாட்டீர் கள். இல்லை, ஐயா, இல்லை, ஐயா. ஆகாபின் நானூறு தீர்க்கதரிசிகள் எதிர்த் ததுபோல, நாற்பது குருவானவர்கள் நின்று கொண்டு எதிர்க்கலாம். ஆனால் நீங்கள் மிகாயாவாக இருந்து தேவனைப் பற்றிக் கொண்டிருந்து, தேவன் உங்களைப் பற்றிக் கொண்டிருந்து, அது வேதத்தில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதை நீங்கள் காண்பீர்க ளானால், எதுவுமே உங்களை தடுத்து நிறுத்த முடியாது. நீங்கள் என்னவாயினும் அங்கு நின்றுகொண்டிருப்பீர்கள். ஏனெ னில் ஏதோ ஒன்று உங்களைப் பற்றிக் கொண்டுள்ளது.

40 தேவன் எங்கோ இருக்கிறாரென்று அந்த ஸ்திரீக்கு வெளிப்படுத்தப்பட்டது.

அவள் எபிரெயச் சுருள்களை மறுபடியும் படித்து, அதைச் சுருட்டி ஜாடியில் போடு வதை என்னால் காண முடிகிறது. அவள் அஞ்ஞான பூசாரியிடம் மறுபடியும் நடந்து சென்று, ''பரிசுத்த பிதாவே, நீங்கள் கூறுவது ஒருக்கால் உண்மையாயிருக் கலாம். ஆனால், பாருங்கள், என் பாட்டி அந்த விக்கிரகத்தை வழிபட்டு, நீங்கள் அளித்த மத உபதேசங்களை (catechism) படித்தார்கள். என் தாயாரும் அதை படித்தார்கள், என் ஜனங்கள் அனைவரும் அதைப் படித்தனர். அது ஏற்கனவே நடந்த ஒன்றைக் குறித்தது. ஆனால் இதுவரை நான் ஒரு அசைவையும் காணவில்லை.

ஆனால் தற்பொழுது அங்கு உண்மை யான அசைவு நிகழ்ந்து கொண்டிருப்பதாக அவர்கள் என்னிடம் கூறுகின்றனர். அது ஏதோ சரித்திரமல்ல, தற்பொழுது நடந்து

கொண்டிருக்கும் ஒன்று'' என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

அவனோ, “பிள்ளையே, கவனி. நீ அங்கு சென்றால் உன்னை சபை பிரஷ்டம் செய்து விடுவேன். ராஜஸ்திரீ என்னும் முறையில், அந்த ஜனங்களுடன் நீ தொடர்பு கொள்ளவே கூடாது'' என்று கூறினான். அதே பிசாசு இன்னமும் ஜீவித்துக்கொண்டிருக்கிறது.

மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்ட சபையோரைக் காட்டிலும், தொடர்பு கொள்ளக் கூடிய உயர்ந்த ஜனக்கூட்டம் இவ்வுலகில் வேறில்லை. அது எங்கிருந்தாலும் எனக்குக் கவலையில்லை, அது நடைபாதையில் இருந்தாலும், வேறெங்கிருந்தாலும், அதுவே உயர்ந்த ஜனக்கூட்டம். கவனியுங்கள்,

தேவனை விசுவாசிக்கும் விசுவாசிகள் பரலோகக் கூட்டம்.

41 அவளுடைய இருதயம் எதிர் நோக்குதலுடன் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அவள் காண விரும்பி னாள். அவள் அதைக் குறித்து கேள்விப் பட்டிருந்தாள். அவளுக்கு அதைக்குறித்து ஒன்றுமே தெரியாது, ஆனால் அவள் அதைக்காண விரும்பினாள். அவள் பூஜாரியிடம், “உமக்கு விருப்பமானால், என் பெயரை புத்தகத்திலிருந்து எடுத்துப் போடும், நீர் விக்கிரகங்களைக்குறித்தும், புத்தகங்களைக் குறித்தும் சொல்லிக் கொண்டே வருகிறீர். அப்படி நீர் கூறி வந்த போதிலும், அவை அசையவேயில்லை. அதன் அசைவை நான் இதுவரை கண்ட தில்லை. உண்மையான ஒன்று எனக்கு வேண்டும்'' என்று கூறுவது என்னால்

கேட்கமுடிகிறது. அவள் புறப்பட்டுச் செல்ல ஆயத்தமாகின்றாள். அத்தகைய ராஜஸ்திரீகள் பலர் இன்று இல்லாதது வருந்தத்தக்கது! சரி.

அவள் செல்வதற்காக ஒரு நல்ல உபாயத்தைக் கையாண்டாள் என்று நாம் காண்கிறோம். அதைக்குறித்து நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவ ளுக்குத் தெரியாது என்று அவள் கூறி னாள். யேகோவா யாரென்று கண்டறிய வும், முன் காலங்களில் அவர் எப்படி கிரியை செய்தார் என்று அறிந்து கொள்ள வும் அவள் சுருள்கள் அனைத்தும் படித்தாள், “அப்படியானால், அவர்கள் கூறும் இந்த மனிதனுடன் யேகோவா தம்மை அடையாளம் கண்டுகொள்வார். அவர் யேகோவாவாக, உண்மையுள்ள

தேவனாக, ஜீவனுள்ளோரின் தேவனாக இருப்பாரானால் ஏதோ ஒரு சிலையோ அல்லது நினைவுச் சின்னமோ, முன்பு ஜீவித்த அல்லது ஜீவிக்காமல் இருந்த ஒருவராக இல்லாமல் இருப்பாரானால்!" என்று கூறிவிட்டு, புறப்பட்டுச் செல்ல ஆயத்தமானாள்.

இப்பொழுது அவள் கூறினாள்....

42 அவள் நிறைய பணத்தைக் கூட கொண்டு சென்றாள். அவள் பொன்னையும், வெள்ளைப்போளத்தையும், தூபவர்க்கத்தையும், வெள்ளியையும், கூட கொண்டு சென்றிருப்பாள் என்று எண்ணுகிறேன். அவள் ஒட்டகங்களின் மேல் இந்த சுமையை ஏற்றினாள். அவள், "நான் செல்கிறேன், நானே இது என்னவென்று காணவேண்டும். அது அவர்கள் கூறினபடி

இருக்குமானால், அதை நான் ஆதரிப் பேன். அப்படி இல்லாமற் போனால் அதனுடன் எவ்விததொடர்பும் கொள்ள மாட்டேன்'' என்று கூறினாள்.

அவள் பெந்தெகொஸ்தேயினருக்கு ஒன்றை கற்பிக்க முடியும் என்று உங்க ளுக்குத் தெரியுமா? அவர்கள் உங்களைப் பார்த்து நகைத்து உங்களைக் கேலிசெய்யும் நிகழ்ச்சியை ஆதரிக்கின்றனர். நீங்கள் விசுவாசிக்கும் காரியங்களை கேலி செய்யும் வானொலி நிகழ்ச்சியை அவர்கள் ஆதரிக்கின்றனர். அது உண்மை. ஆம், ஐயா. ஏனெனில் அப்படி செய்வது சரி யென்று அவர்களுக்குத் தோன்றுகிறது. நிச்சயமாக. "மனுஷனுக்குச் செம்மை யாய்த் தோன்றுகிற வழியுண்டு'' இயேசு கூறினார்.

அவளைக் கவனியுங்கள். அவள், ''அது உண்மையாயிராவிடில், என்னுடைய வெகுமதிகளை நான் திரும்பக் கொண்டு விடுவேன்'' என்றாள். ஆனால் அவளே அதைக்கண்டு, அதைக் குறித்து உறுதி கொள்ளப்போகிறாள். அவள் சுருள்களைப் படித்தாள், அவள் யேகோவா யாரென்று அறிந்திருந்தாள், இப்பொழுது அவள் காணப்போகின்றாள். அவர் முன்பிருந் தால், இப்பொழுதும் இருக்கிறார். அவர் இன்னும் யேகோவாவாக இருக்கிறார்.

அது இந்நாளுக்கும் பொருந்தும். இயேசு கிறிஸ்து முன்பு என்னவாக இருந் தாரோ, அப்படியே எக்காலத்தும் இருப் பார். அவர் மாறுவதில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' என்று வேதம் உரைக்கிறது.

43 அந்த ஸ்திரீ தனக்கு நேரிடும் இடையூறுகளைக் குறித்து பேசிக் கொண்டிருக்கையில், இதுவும் அவளுடைய சிந்தையில் எழுந்திருக்கக்கூடும். ''நான் பாலைவனத்தைக் கடக்கவேண்டும். அது மிகவும் நீளமான ஒன்று.

அதை பாலஸ்தீனாவிலிருந்து சேபா வரைக்கும் சகாரா பாலைவனத்தின் வழியாக அளந்து பாருங்கள். அந்த தூரத்தைக் கடக்க ஒட்டகங்களுக்கு தொண்ணூறு நாட்கள் - மூன்று மாதங்கள் - பிடிக்கும் என்று எண்ணுகிறேன்; அதாவது அவர்கள் தொடர்ச்சியாக ஓரிடத்திலிருந்து மற்ற இடத்துக்குப் பயணம் செய்தால் அங்கு அடைவதற்கு மூன்று மாதங்கள் பிடிக்கும். அவள் அந்த வெப்பமான பாலைவனத்தைக் கடந்து வந்தாள் என்பதை சற்று எண்ணிப் பாருங்கள். அவள் அதை

மனதில் கொண்டிருந்தாள், அவள் அதை செய்தேயாக வேண்டும். அது உண்மை யாக தேவனா என்று கண்டு கொள்ள, அவள் பாலைவனத்தைக் கடந்து வெகு தூரம்பயணம் செய்து அங்கு அடைய வேண்டியதாயிருந்தது.

''அவள் இந்த சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ் சுமத்து வாள்'' என்று இயேசு கூறினதில் வியப் பொன்றுமில்லை. அவளுக்கு 'ஏர்கண்டி ஷன்' செய்யப்பட்ட 'காடிலாக்' கார் எதுவு மில்லை. இங்கு டல்லாஸிலுள்ள சிலருக்கு அதைக் கேட்க தெருவைக் கடந்து வர மனதில்லை. அது உண்மை. அவள் கடைசி நாளில் நிற்பாள் என்பதில் வியப்பொன்று மில்லை. அவர்கள் எங்காவது நின்று கொண்டு அதைக் குற்றப்படுத்துகின்றனர், மற்ற விடங்களிலும் அவர்கள் அவ்வாறே

செய்கின்றனர். அவள் பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்“ என்றார், கவனியுங்கள்.

44 அவள் இந்த இடையூறை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அவள் ஒருக்கால் இரவில்பயணம் செய்திருக்கக்கூடும், ஏனெனில் அந்த பாலைவனம் மிகவும் வெப்பமானது. சூரியனுடைய கதிர்கள் நேரடியாக சகாரா பாலைவனத்தின் மேல் விழும்போது, அது உங்களுடைய சருமத்தை அப்படியே எரித்துவிடும். அந்த பாலைவனத்தில் அவள் ஒருக்கால் இரவில்பயணம் செய்திருக்கக்கூடும்.

வேறொரு காரியத்தை நினைவு கூருங்கள். அவள் காணிக்கைகளை சுமை சுமையாக கூடகொண்டு சென்றிருந்தாள். இஸ்மவேலின் குமாரர் குதிரைகளின் மேல் வேகமாக செல்லக்கூடியவர்கள். அவர்கள் பாலைவனக் கொள்ளைக்காரர்கள். அவர் கள் வெள்ளம் போல் திரளாக வந்து, அவளுடன் பயணம் சென்ற சிறு கூட்டம் சேவகர்களையும் அண்ணகர்களையும் கொன்று வீழ்த்தி, அவள் காணிக்கையாக கொண்டு சென்ற கோடிக்கணக்கான டாலர் கள் விலையுள்ள ஆபரணங்களையும், விலையுயர்ந்த தூப்வர்க்கம் வெள்ளைப் போளம் போன்றவைகளையும் கொள்ளை யடித்து சென்றிருப்பது எவ்வளவு எளிதாக இருந்திருக்கும்

ஆனால் அதைக்குறித்து முக்கியமான ஒன்று என்னவெனில், உங்கள் இருதயம்

தேவனைக் காண வேண்டுமென்று தீர் மானம் கொள்ளுமானால் அந்த ஒன்று உங்களை இறுகப்பற்றிக் கொண்டால், நீங் கள் ஆபத்தையோ அல்லது தோல்வி யையோ பொருட்படுத்தமாட்டீர்கள். அது எவ்வளவு கடினமாக இருந்தபோதிலும், அதை எப்படியாயினும் பெற்றே தீருவீர் கள்.

45 நிச்சயமாக அது கொள்ளைக்கார ருக்கு ஒரு நல்ல தருணம். அவர்களில் யாராகிலும் வந்து தாக்கியிருக்கக் கூடும். ஆனால் அவளோ ஆபத்தை பொருட் படுத்தவில்லை. இங்கு வியாதிப்பட்ட வர்கள் படுக்கையை விட்டு எழுந்து நடக்க பயந்து, “என்னால் முடியுமோ என்று தெரியவில்லை, அப்படி செய்ய எனக்கு பயமாயுள்ளது" என்று கூறுவது போல், அவளால் எழுந்து நடக்க முடியுமோ

என்னும் எண்ணம் அவளுக்கிருக்க வில்லை. அப்படிப்பட்ட பயம் அவளுக் கில்லை. ஏதோ ஒன்று அவளைப் பற்றிக் கொண்டிருந்தது.

இது போன்று நம்மையும் ஏதோ ஒன்று பற்றிக்கொள்ளுமானால், ஏதோ ஒன்று நிச்சயம் நிகழும். அது உங்களைப் பற்றிக் கொள்ளும் வரைக்கும், உங்களால் அப்படி செய்ய முடியாது, அப்படி செய்ய முயலா தீர்கள். ஆனால் அது உங்களைப் பற்றிக் கொள்ளும்போது, அது நிச்சயம் நிகழ்ந்தே தீரும்.

46 கவனியுங்கள், எத்தனை கொள் ளைக்காரர் பாலைவனத்தில் இருந்தனர் என்பதை அவள் சிந்தித்துப் பார்க்கவே யில்லை. மற்றும் அவள் அங்கு அடையும் போது, அவள் ஏற்றுக்கொள்ளப்படு

வாளா? மாட்டாளா? அவள் வேறொரு ஸ்தாபனத்தை சேர்ந்தவள் என்று உங்களுக்கு தெரியும். எனவே அவள் ஏற்றுக் கொள்ளப்படுவாளா? கூட்டத்தில் அவள் வரவேற்பு கப்படுவாளா? வருவதற்காக அவளுக்கு அழைப்பு கொடுக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவளில் கிரியை செய்து, அவள் வரும்படி செய்தார். எனவே அவளை வழிநடத்தினவர் அவரே அவள் அறிந்துகொள்ள வேண்டுமென்று வாஞ்சித்த அந்த எண்ணத்தை திருப்தி செய்யும் பொருட்டு. ஞாபகம் கொள்ளுங்கள், இது உங்களுடைய வாழ்க்கை. அது அவளுடைய வாழ்க்கை. அதை சரிபடுத்திக்கொள்ள, உங்களுக்கு ஒரு தருணம் மாத்திரமேயுண்டு.ஒருக்கால் இன்றிரவு உங்கள் கடைசி தருணமாக இருக்கக்கூடும். இன்றிரவு நீங்கள் கிறிஸ்து

வைப் புறக்கணித்தால், ஒருக்கால் உங்களுக்கு வேறொரு தருணம் இல்லாமற் போகலாம்.

47 அது ஒருக்கால் அவளுடைய கடைசி தருணமாக இருந்திருக்கலாம். அதை அவள் உணர்ந்திருந்தாள். அவள் பெற்றிருந்த அவளுடைய குளிர்ந்த, சடங்காச்சாரமான மார்க்கம் சரியா, அல்லது உண்மையில் ஜீவிக்கிற தேவன் ஒருவர் இருக்கிறாரா?தன் சொந்த மார்க்கத்தில் அவள் ஒன்றையும் காணவில்லை, ஆனால் மற்ற மார்க்கத்தில் ஏதோ ஒன்றுண்டு என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவர் யாரென்று அவள் படித்து அறிந்திருந்தாள். அவள் காண விரும்பினாள். அவளுடைய வாழ்க்கை ஆபத்தான நிலையையடைந்தது.

48 இது என்னுடைய வாழ்க்கை . இன்றிரவு இந்த காரியத்தை நான் சந்தித் தேயாக வேண்டும். நான் நியாயத்தீர்ப் புக்கு வரவேண்டும். அது போன்று நீங்க ளும் நீயாயத்தீர்ப்புக்கு வர வேண்டி யவர்களாயிருக்கிறீர்கள். நாம் இருக்கை யில் அமர்ந்தோ, அல்லது படுக்கையில் படுத்துக்கொண்டோ, நாம் எங்கிருந்தா லும், இந்த காரியத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனெனில் எந்நேரத்தில் தேவனுடைய அலமாரியிலிருந்து உங்கள் சீட்டு வெளியே எடுக்கப்படுமென்று உங்களுக் குத் தெரியாது. நீங்கள் நியாயத்தீர்ப்பன்று பதில் கூற வேண்டும். நீங்கள் சபை அங்கத்தினராயிருந்தாலும், இல்லாமற் போனாலும், அதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நீங்கள் எப்படியா

யினும் பதில் கூற வேண்டும். அதைக் குறித்து மிகுந்த நிச்சயமுடையவர்களா யிருங்கள்.

உங்கள் அனுபவத்தை தேவனுடன் சரிபார்த்து ஏதோ ஒன்று உங்களை இறுகப்பற்றிக்கொண்டு, உங்களை கோட் பாடுகள், முறைமைகள் போன்றவைகளி னின்று விலக்கி, இந்த வார்த்தைக்கு மறுபடியும் உங்களைக் கொண்டு வந்துள் ளதா என்பதைக் கவனியுங்கள். பிள்ளை களுடைய இருதயங்கள் பிதாக்களிடத் திற்கு கடைசி நாட்களில் திரும்பும்'' என்று அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார். அதை நாம் விசுவாசிக்கிறோம். கவனியுங்கள், அதை நாம் இந்நாளில் காண்கிறோம்.

49 அவள் பயத்தைக்குறித்தோ வேறெ தைக் குறித்தோ சற்றேனும் எண்ண

வில்லை. அதொன்றும் அவளைத் தொல் லைப்படுத்தவில்லை. அவள் அதைக் குறித்து எண்ணவேயில்லை. அவளுக் கிருந்த கருத்து என்னவெனில், அது உண் மையா இல்லையாவென்று கண்டுகொள்ள விரும்பினாள். எனவே அவள் பாலை வனத்தைக் கடந்துசென்றாள்.... அப்படி செய்தது அவளுக்குக் கடினமாயிருந்தது.

உங்களுக்குள்ள எதுவும் அதுதான் தொல்லை. பெந்தெகொஸ்தேராகிய நமக்கு தேவையான அனைத்தும் தாம் பாளத்தில் வைக்கப்பட்டு எளிதாக அளிக்கப்படுகின் றன. போதகர் நேரத்தோடு வராவிட்டால், ''நான் அசம்பிளீஸை விட்டு 'சர்ச் ஆஃப் காட்டை சேர்ந்து விடுகிறேன்'' என்கி றோம். உங்களுக்குத் தெரியும், அது ...

நாம் குழந்தைகளைப் போல் அதிகம் செல்லம் கொடுக்கப்படுகிறோம்.

50 இது ஒன்றை எனக்கு ஞாபக மூட்டுகிறது. ஒரு காலத்தில் கடலிலிருந்து எடுக்கப்பட்ட உப்பு ஒன்றிருந்ததாம். கடலையே காணாத கவிஞன் ஒருவன் இருந்தான். அவன் கடலைக் குறித்து கவிதைகள் எழுதியுள்ளானே யன்றி, அதைக் கண்டதில்லை. அவன் கடலைக் காணப் புறப்பட்டபோது, உப்பு அவனை சந்தித்ததாம். உப்பு அவனிடம், “நல்ல மனிதனே, எங்கு செல்கின்றாய்?'' என்று கேட்டது.

அதற்கு, கவிஞன், ''நான் கடலைக் காணச் செல்கின்றேன். நான் கவிஞன். கடலைகள் குறித்த கவிதைகள் எழுதி யுள்ளேன். கடல் நீரை முகரவும், பெரிய

கடல் அலைகள் எழும்புவதைக் காணவும், கடல் பறவைகள் பாடுவதைக் கேட்கவும், நீலவானம் தன்னை கடலில் பிரதிபலிப் பதைக் காணவும் எனக்கு மிகுந்த ஆசை யுண்டு'' என்றானாம்.

உப்பு நான்கைந்து முறை புகை பிடிக்கும் குழாயிலிருந்து (Pipe) புகையை இழுத்து வெளியே ஊதி, கீழே நோக்கி, எச்சில் துப்பி, 'எழுபது ஆண்டுகளுக்கு முன்பு நான் அதில் பிறந்தேன். கவர்ச்சி தன்மை கொண்ட எதுவும் அதில் உள்ள தாக எனக்குப் புலப்படவில்லை'' என்ற தாம்.

அது நீண்ட காலம் அதில் வாழ்ந்த காரணத்தால், எல்லாமே சாதாரணமாகத் தோன்றினது.

இன்றிரவு நம்மிடையேயும் அது போன்ற ஒன்று காணப்படுகின்றது. நாம் தேவனுடைய சமுகத்தில் நீண்ட நாட்கள் வாழ்ந்த காரணத்தால், அது நமக்கு சாதாரணமான ஒன்றாக புலப்படுகின்றது. நாம் உறக்கத்தினின்று விழித்துக்கொண்டு, இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்றும், அவர் மரித்தோரிலிருந்து உயிரோ டெழுந்தாரென்றும் உணர வேண்டியவர்க ளாயிருக்கிறோம்.

51 இந்த ராஜஸ்திரீக்கு அது புது அனுபவமாக இருக்கும். அவள் விடாப் பிடியாக இருந்து, அதைக் காண வேண்டு மென்று விரும்பினாள். நிச்சயமாக, அவள் விடாப்பிடியாக இருந்தாள். அவள் தன் தேசத்தை விட்டு புறப்பட்டுச் செல்ல, விடாப்பிடியாக இருக்க வேண்டியதா

யிருந்தது. அவள் தன் கௌரவத்தை யெல்லாம் விட்டு விட வேண்டியதா யிருந்தது. அவள் சேர்ந்திருந்த சீட்டுக் கச்சேரி சங்கங்களையும், தையல் தைக்கும் குழுக்களையும், ராஜஸ்திரீ என்னும் முறை யில் அவள் கொண்டிருந்த புகழ் அனைத் தையும் அவள் விட்டு விட வேண்டியதா யிருந்தது. அவர்களின் பார்வையில் அவள் இகழ்ச்சிக்குள்ளானவளாய் இருந் திருப்பாள்.

ஆனால் அதனால் அவளுக்கென்ன கவலை? அவளுடைய ஆத்துமாவே அவளுக்கு முக்கியம் வாய்ந்தது. அது உங்கள் ஆத்துமா, அது என் ஆத்துமா, அதனால் மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன், ஒருத்துவக்காரர், இருத் துவக்காரர், திரித்துவக்காரர்; அது யாரா

யிருப்பினும், அவர்களுக்கு என்ன கவலை? என் ஆத்துமாவைக் குறித்து நான் கவலைகொள்ள வேண்டியவனாயிருக்கி றேன். உங்கள் ஆத்துமாவைக் குறித்து நீங்கள் கவலைகொள்ள வேண்டியவர்களா யிருக்கிறீர்கள். உறுதிப்படுத்தப்படுகின்றது தேவனுடைய வார்த்தையே.

52 யார் என்ன கூறினபோதிலும்; புகழ் வாய்ந்த அவளுடைய கூட்டாளிகள், நண்பர்கள் என்ன கூறினாலும், அது அவ ளைப் பாதிக்கவில்லை. அது உண்மையா யிருந்து, உலகத்திலுள்ள அனைத்தையும் அவள் விட வேண்டு மெனும் நிலை ஏற்படுமானால், அவள் அதற்கு ஆயத்த மாக இருந்தாள். அவள் தன் ராஜ்யத் தையும் கொடுத்து விட ஆயத்தமா யிருந்தாள். அது உண்மையாயிருக்கு

மானால், அவள் தேவனைக் கண்டு கொள்ள விரும்பினாள். அவளுடைய இருதயத்தில் ஏதோ ஒன்று குடிகொண்டிருந்தது. அவள் பாலைவனத்தைக் கடந்து அங்கு அடைந்தாளென்று நாம் காண்கிறோம். ஒவ்வொரு நாளுமாக தொண்ணூறு நாட்கள் பயணம் செய்து முடிவில் மூன்று மாதங்கள் கழித்து பயணிகளின் கூட்டம் சாலோமோன் அரண்மனை வாசலையடைந்தது.

இன்று கூட்டங்களுக்கு அநேகர் ஒருவித மனப்பான்மை கொண்டவர்களாய் வருவது போல் அவள் வரவில்லை. அநேகர் இன்று, 'அவர்களிடம் உள்ளதாக கேள்விப்படுகிறேன். யாரோ ஒருவர் அவர்களிடம் உள்ளதாக என்னிடம் கூறினார். ஊ, ஊ, சரி நான் சென்று

பார்க்கிறேன்'' என்று கூறி வருகின்றனர். அவர்கள் சிறிது நேரம் உட்காருகின்றனர். அவர்களை நீங்கள் கவனிப்பீர்களானால், அவர்களை எங்கும் காணலாம். அவர்கள், 'அவர் கூறும் முதல் வார்த்தையே என் விசுவாசத்துக்கு முரணாயுள்ளது. நான் மறுபடியும் இக்கூட்டங்களுக்கு செல்லவே மாட்டேன்'' என்று கூறிவிட்டு வெளியேறு கின்றனர். பாருங்கள், அவர்கள் போதிய நேரம் அங்கு உட்காருவதில்லை. அது தான்.

53 இயேசு அந்த எழுபது பேருக்கு முன்பாக உட்கார்ந்திருந்த போது எப்படி யிருந்தது? அவளுக்கு எழுபது பேர் மாத்திரமல்ல, திரளான கூட்டமும் உண்டா யிருந்தது. அவர் பெரிய மனிதனாகக் கருதப்பட்டார். அவர்கள், "இவர் ஒரு

தீர்க்கதரிசி, அந்த கலிலேய தீர்க்கதரிசி'' என்றனர். ஒரு நாள் அவர் தம்மைச்சூழ நிற்கும் திரளான கூட்டத்தை நோக்கி, 'நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம் சத்தைப் புசியாமலும், அவருடைய இரத் தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை'' என்றார்.

அங்கு உட்கார்ந்திருந்த மருத்துவர்கள் இந்த மனிதனைக் குறித்து என்ன கூறினர் என்று கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? 'அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணி, அவருடைய மாம்சத்தைப் புசிப் பதா? இவர் நம்மை இரத்தம் குடிக்கும் பூதங்களாக (Vampires) ஆக்கி விடுவார் போலிருக்கிறதே!'' என்றனர்.

அவர் அதற்கு விளக்கம் தரவே யில்லை. அவர் அதற்கு விளக்கம் தர வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர் தம்மைச் சுற்றிலுமிருந்த ஒட்டுண்ணி களை (Parasites) உதறித்தள்ள வேண்டிய தாயிருந்தது. அவர்களுக்கு செல்லம் கொடுத்து அவர்களுடைய பெயர்களைப் புத்தகத்தில் எழுதுவதற்கு பதிலாக, அவர் அவர்களை உதறித் தள்ளினார். அவர்க ளால் அவருக்கு எவ்வித உபயோகமு மில்லை.

எனவே அவர், ''புசியாமலும், பானம் பண்ணாமலும் இருந்தால்...''என்று கூறின தாக காண்கிறோம். அவர் அதற்கு விளக் கம் தரவேயில்லை.

54 கவனியுங்கள், அந்த சீஷர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தனர். அவர் கள் ஒன்றுமே கூறவில்லை. அங்கிருந்த மருத்துவர்களும் பரிசேயர்களும், "பாருங் கள், இந்த மனிதனுக்கு மூளை கோளாறு ஏற்பட்டு விட்டது. அவனுக்கு பயித்தியம் பிடித்து விட்டது. அவனுடைய உடலை நாம் அறுத்து அதை உண்ண வேண்டுமாம், அவனுடைய இரத்தத்தை நாம் குடிக்க வேண்டுமாம்! இரத்தம் குடிக்கும் மானிட பூதம்! அப்படிப்பட்ட செயலை நாம் புரிய முடியாது. ஓ, அது பயித்தியக்காரத்தனம். அந்த மனிதனுக்கு புத்தி தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது'' என்று கூறுவதை என்னால் காண முடிகிறது. அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

அதன் பிறகு அவர், அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருக்கிற எழுபது வேதசாஸ்திர நிபுணர்களை நோக்கி, “மனுஷ குமாரன் தாம் இறங்கி வந்த பரலோகத்துக்கு ஏறிச்செல்வதை நீங்கள் காணும்போது என்ன கூறுவீர்கள்?'' என்று கேட்டார்.

வேத சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்ற அவர்கள் சுற்று முற்றும் பார்த்து, ''மனுஷகுமாரன் தாம் இறங்கி வந்த பரலோகத்துக்கு ஏறிச் செல்வதா? இவரை நமக்கு நன்றாகத் தெரியுமே! அவர் பிறந்த தொழுவத்துக்கு நாம் சென்றிருக்கிறோம். அவரை ஆட்டின தொட்டிலை நாங்கள் கண்டிருக்கிறோம். அவருடைய தாயார் யாரென்று நமக்குத் தெரியும். நாம் அவர் நம்முடன் மீன் பிடிக்கிறார், நம்முடன் வேட்டையாடுகிறார். இந்த மலைகளுக்கு

தான் அவர் வேட்டையாடச் செல்கிறார். நாம் உடுக்கும் அதுபோன்ற உடைகளையே அவரும் உடுக்கிறார், நாம் உண்ணும் உணவையே அவரும் உண்கிறார், அப்படியானால் மனுஷகுமாரன் என்று கூறிக்கொள்ளும் இவர் எங்கிருந்து வந்தார்? அவர் நாசரேத்தூரிலிருந்து அல்லவா வருகிறார். இதை எங்களால் ஏற்றுக் கொள்வது கடினம்'' என்று கூறிவிட்டு அவரைவிட்டுப் போய் விட்டனர். அவர் அப்பொழுதும் அதற்கு விளக்கம் தர வில்லை. பாருங்கள்?

55 அவர் பன்னிருவரை நோக்கி, ''நீங்களும் போய் விட மனிதாயிருக் கிறீர்களோ?''என்றார்.

அவர்களாலும் அதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஏதோ ஒன்று

அவர்களைப் பற்றிக்கொண்டது. பாருங்கள், அவர்கள் அறிந்திருந்தனர். அப்பொழுது தான் பேதுரு நாம் மறக்க முடியாத இந்த வார்த்தைகளைக் கூறினான்: ''ஆண்டவரே, வேத வாக்கியங்கள் உம்மால் உறுதிப்படுத்தப்படுவதை நாங்கள் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். நாங்கள் எங்கே போவோம்? ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டு என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். நீரே ஜீவஊற்று. இதைக் குறித்து நாங்கள் திருப்தி அடைந்துள்ளோம்.''

இயேசு, ''பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொண்டேன். உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான்'' என்றார்.

பாருங்கள், அவருக்கு பயம் எதுவுமில்லை. அவர் நாசுக்காக பேசவோ,

செல்லம் கொடுத்து அவர்களை முதுகில் தட்டிக்கொடுத்து, இரகசியமாக ஞானஸ் நானம் கொடுக்கவோ, அப்படியொன்றம் அவர் செய்யவில்லை.

அவர் பூமியில் மாம்சத்தில் தோன்றின் தேவனாக இருந்தார். அவர் தேவனுடைய வார்த்தையின் உறுதிப்படுதலாகத் திகழ்ந் தார். பசியுற்றோர் அவரிடம் வந்தனர். பசியில்லாதோர் அவரிடம் வர முடிய வில்லை அவர், ''பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும் ''என்றார். ஒருவன் கொடுக்கப்படாதிருந் தால், எப்படி வரமுடியும்?

56 கவனியுங்கள், இந்த ராஜஸ்திரீ முடிவில் அங்கு அடைந்தாளென்று நாம் காண்கிறோம். மற்றவர்கள் போல அவள் காத்திருக்கவில்லை. சிலர் அவளைப் பின்

தொடர்ந்தனர். எப்பொழுதுமே மூவகை சாராரர் உள்ளனர்: விசுவாசிகள், பாவனை விசுவாசிகள், அவிசுவாசிகள். அவிசுவாசி உடனடியாக எழுந்து நடந்து சென்று விடுவான். பாவனை விசுவாசி நீண்ட காலம் நின்று கொண்டிருப்பான். மூவகை சாரார் இருந்தனர்; அவிசுவாசி, பெரிய கூட்டம்; பாவனை விசுவாசி, கடைசியாக வெளிசென்ற கூட்டம். ஆனால் அங்கு ஒரு உண்மையான விசுவாசி இருந்தான், அவ னால் அதற்கு விளக்கம்தர முடியவில்லை. அவர்களுக்கு அதைக் குறித்து ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் அவர் வார்த்தை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், அத் துடன் அது முடிவு பெற்று விட்டது!

57 அந்த ராஜஸ்திரீயை நாம் காண் கிறோம். அவள் அதிக உணவை, அநேக

ரொட்டி துண்டுகளையும், இன்னும் அநேக பொருட்களையும் கொண்டு சென்றிருந் தாள். அவளுடைய கூடாரங்களையும் மற்றவைகளையும் கூட அவள் கொண்டு சென்றிருந்தாள். இவைகளை அவள் முற்றத்தில் - ஆலயத்தின் வெளிப்பிரகா ரத்தில் இறக்கினாள். அது சரியா தவறா என்று உறுதி கொள்ளும் வரைக்கும், அவள் அங்கேயே தங்கியிருக்க தீர்மா னித்து, தன் கூடாரங்களை நாட்டினாள்.

ஒவ்வொரு நாளும் அவள் அந்த வேதவாக்கியங்களைப் படித்தாள் என்ப தில் சந்தேகமில்லை. அவர்கள் ஒருக்கால் இரவு நேரங்களில் பயணம் செய்திருக் கக்கூடும். பகல் நேரத்தில் அவள் பாலை வனச் சோலையிலிருந்த பனை மரங்களின் நிழலில் உட்கார்ந்து கொண்டு, யேகோவா

என்னவாயிருந்தார் என்றும், அவர் என்ன வாயிருந்ததாக கருதப்பட்டாரென்றும் படித்தாள். யேகோவாவைக் குறித்த அறிவை அவள் பெற்றிருந்தாள். அவர் அந்த மனிதனுக்குள் இருப்பாரானால், அவனுடைய கிரியைகளின் மூலம் அவள் அதை அறிந்துகொள்வாள். அவர் அவனுக்குள் இருப்பது சரிதானா இல்லையா என்பதை அவள் கண்டுகொள்வாள். எனவே அவள் வேதத்தில் கூறப்பட்டவைகளை நன்கு அறிந்திருந்தாள்.

58 அவள் அங்கு சென்று, என் பூஜாரி கூறுவதைக் காட்டிலும் வித்தியாசமான ஒன்றை அவர் கூறினால், நான் ஒட்டகத்தின் மேலேறி சென்றுவிடுவேன்' என்று கூறவில்லை. அவள் உறுதி கொள்ளும்மட்டும் அங்கு தங்க தீர்மானம்

கொண்டாள். ஓ, இன்று மனிதர்களும் ஸ்திரீகளும் அப்படி செய்வார்களானால் எவ்வளவு நலமாயிருக்கும்! வேதாகமத்தை எடுத்துக்கொண்டு, பரிசுத்த ஆவி இந்நாளுக்குரியதா இல்லையாவென்பதை அறிந்துகொள்ளுங்கள். நாம் பேசிக் கொண்டிருக்கும் இக்காரியங்கள் நாம் வாழும் இம்மணி நேரத்தில் நிறைவேறு மென்று முன்னுரைக்கப்பட்டுள்ளதா என் பதை கண்டுகொள்ளுங்கள். அவள் அப்படி செய்தாள்; அதனால் தான் இயேசு அவளுடைய பெயர் பிழையற்றது (infallible) என்பதாக கூறினார். பிழையற்ற தல்ல, அது என்றென்றும் அழியாதது (immortal).

அவள் நியாயத்தீர்ப்பின் நாளிலே எழுந்து நின்று டெக்ஸாஸிலுள்ள டல்

லாஸை குற்றப்படுத்துவாள். நியாயத்தீர்ப்பின் நாளிலே அவள் அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் குற்றப்படுத்துவாள். ஏனெனில் அவள் பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள்; இதோ சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் - உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தமது உயிர்த்தெழுந்த வல்லமையுடன் இங்கே இருக்கிறார்.

59 கவனியுங்கள். அவள் கூடாரம் போட்டாள். இங்குள்ள (பிள்ளைகளுக்காக இதை கூற விரும்புகிறேன்). மணிகள் அடித்தன, எக்காளங்கள் முழங்கின, சபை ஆராதனை துவங்கினது, ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு சபை ஆராதனை இருந்தது. அதை யோசித்து பாருங்கள்,

அவர்கள் தினந்தோறும் சபைக்குச் செல்ல விரும்பினர். சபை ஆராதனை துவங்கினது. இந்த ராஜஸ்திரீ அங்கு போய் பின் வரிசையில் உட்கார்ந்திருப்பாள் என்று எண்ணுகிறேன். சற்று கழிந்து, எல்லா எக்காளங்களும் முழங்கின, பாடல்கள் பாடப்பட்டன, மற்றவையும் நடைபெற்றன.

சிறிது நேரம் கழித்து, போதகர் சாலொமோன் வெளியே வந்து உட்கார்ந்தான். ஜனங்கள் அனைவரும் அவனை மதித்தனர். ஏனெனில் அவர்கள் அவனை நேசித்தனர். அவன் தேவனுடைய ஊழியக்காரன். அவன் வெளியே வந்த போது, ஒருவனும் கூட, ''ஊ, அவன் இதை சேர்ந்திருந்தால், அவன் என் குழுவை மாத்திரம் சேர்ந்திருந்

தால்!'' என்று கூறவில்லை. அங்கு ஒரு குழு மாத்திரமேயிருந்தது. அது அவர்கள்.

எனவே அவர்கள் அங்கு குழுமி யிருந்தனர்.

60 அங்கு ஒருவர் வருவதை நாம் காண்கிறோம். சாலொமோன் அவர்க ளுடைய இருதயத்தில் மறைந்திருந்த இரகசியங்களை வெளிப்படுத்தினான். அந்த ராஜஸ்திரீ, "ஒருநிமிடம் பொறு. என்னே, அது எவ்வளவு உண்மை யாயுள்ளது!'' என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது, அடுத்த படியாக ஒருவர் வருகிறார், அதே போல் நடக்கிறது, ஓ, அவளுடைய இருதயம் மகிழ்ச்சியினால் துள்ளியது. அவள் வியந்தாள். அவள் ஒரு ஜெப அட்டையை பெற்று காத்திருக்கக்கூடும். (அப்படி கூறு

வதனால் மன்னிக்கவும். நான் கூற வேண்டியதை வலியுறுத்தவே இவ்வாறு கூறுகின்றேன்.) அவள் ஒரு ஜெப அட்டையைப் பெற்று காத்திருக்கக்கூடும். ஒரு நாள் அவளுடைய ஜெப அட்டை எண் அழைக்கப்பட்ட போது, அவள் சாலொமோனின் மூலம் கிரியை செய்யும் பரிசுத்த ஆவியின் முன்னிலையில் வந்து நின்றாள், ”ஒன்றாகிலும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருக்கவில்லை என்று வேதம் கூறுகிறது. மகத்தான பரிசுத்த ஆவியானவர், அவள் கேட்பதற்கு அவசியமாயிருந்த ஆவியானவர், அவள் கேட்பதற்கு அவசியமாயிருந்த அனைத்தையும் வெளிப்படுத்தினார்; அவர் அதை வெளிப்படுத்தினார்.

இதோ பரிசுத்த ஆவியானவர் தமது பரிபூரணத்தில் இயேசுவுக்குள் வாசமாயிருந்து, அதே காரியத்தை செய்துவந்தார். இருப்பினும் அந்த பரிசேயர்கள், ''எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காண்பியும், இங்குள்ள மனிதனை சுகப்படுத்தும். இதை செய்யும், இதை சொல்லும், இது எப்படியிருக்கும், அது எப்படியிருக்கும்?'' என்றனர்.

61 அந்த ராஜஸ்திரீ அங்கு நின்றபோது, ''ஒன்றாகிலும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருக்கவில்லை'' என்று வேதம் கூறுகிறது. அவள் அறிய வேண்டிய அனைத்தையும் அவன் வெளிப்படுத்தினான், அவன் அதைக் குறித்தெல்லாம் அவளிடம் கூறினான்.

அப்படி நிகழ்ந்தபோது, மற்றவர்கள் இதைக் குறித்து அவளிடம் கூறினதை ஏற்றுக்கொள்ள அவளுக்கு அவசியமிருக்க வில்லை. அவள் அதை கண்கூடாகக் கண்டாள், அதை விசுவாசித்தாள். அவள் அங்கிருந்த கூட்டத்தினரின் பக்கம் திரும்பி, 'நான் கேள்விப்பட்ட போது, இதைக் குறித்து வியந்தேன். ஆனால் நான் கேள்விப்பட்ட அனைத்தும் உண்மை, நான் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும் அதிகம் உண்டாயிருக் கிறது'' என்றாள். பாருங்கள், அவள் அழைக்கப்பட்ட நேரம் வந்த போது, அவள் அதைக் கண்டாள். அது அவளிலே கிரியை செய்தது. அது உண்மையென்பதை அவள் அறிந்து கொண்டாள். அவள், ''உம்மை தம்முடைய ஊழியக்காரனாக நியமித்த தேவனாகிய

கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவாராக'' என்றாள்.

அது என்ன? இந்த ஏழை ஸ்திரீ அங்கு தன் கோட்பாடுகளுடனும் விக்கிரகங்களுடனும் வாழ்ந்து வந்தாள். ஒரு சமயம், பசியுற்ற அவளுடைய இருதயத்தில் .... எந்த ஒரு உண்மையான விசுவாசியும் தேவன் கிரியை செய்வதைக்காண விரும்புகிறான். அவர் எப்பொழுதாவது தேவனாயிருந்தால், அவர் இன்னமும் தேவனாயிருக்கிறார். அவள் உண்மையான ஒன்றைக்கண்டாள், நடிப்பான ஒன்றையல்ல; உண்மையான ஒன்றை. அவள் மிகுதியான தன் நாட்களில் தேவனை சேவித்தாள். ஏனெனில் உண்மையான ஒன்றை அவள் கண்டாள்.

62 ஒ, நண்பனே, 'இந்த கோட்பாட்டை சேர்ந்து கொள், முஸ்லீம் மார்க்கத்தை சேர்ந்துகொள், இதற்கு வந்துவிடு; இது அது மற்றதற்கு வந்துவிடு'' என்னும் எத்தனையோ காரியங்களை நாம் கண் டிருக்கிறோம். இத்தகைய உணர்ச்சி வசப் பட்ட காரியங்கள். ஆனால் உண்மையில் உலகமானது உண்மையான ஒன்றைக் காண்பதற்கு இன்றிரவு பசியுற்றிருக்க வேண்டும் - ஏதோ போலியான இரத்தம் வடிதல், கீறல் உண்டாதல், எண்ணெய் தோன்றுதல் போன்ற வேத ஆதாரமற்ற காரியங்களை அல்ல; ஆனால் இக்கடைசி நாட்களில் தமது ஜனங்களில் வாழ்ந்து இத்தகைய செயல்கள் புரிவதாக வாக்களித் துள்ள உண்மையான இயேசு கிறிஸ்துவை; இந்நாட்களில் நடக்குமென்று வேதவாக் கியங்கள் உரைத்துள்ளவைகளை.

# தென்தேசத்து ராஜஸ்திரீ



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து